# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2020 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாள், செவ்வாய் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலை கோட்டம் வார்டு எண்.30 மற்றும் 63க்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிப்பிடங்கள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.G.ராமசாமி, திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

திரு.G.ராமசாமி, ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.12,175/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) பத்தி எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | செலுத்திய இடம் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2018–19) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | வார்டு எண்.30 மாஜி இராணுவத்தினர் காலனி 5வது தெரு நவீன கழிப்பிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் இ7/7976/2013(மையம்) | திரு.G.ராமசாமி, | முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 08.09.14 காப்புத் தொகை | 4703.00 | பகுதி - VII பக்கம் எண்- 23 வ.எண் - 298 (மைய அலுவலகம்) |
| 2 | வார்டு எண்.63 ஆலத்துார் புதுத்தெரு பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள நவீன கழிப்பிடத்தில் மராமத்து பணி மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் இ7/7974.2019 (மையம்) | திரு.G.ராமசாமி, | முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை | 10.06.14 காப்புத் தொகை | 7472.00 | பகுதி - VII பக்கம் எண்- 10 வ.எண் - 116 (மைய அலுவலகம்) |
| **மொத்தம்** | | | | | 12175.00 | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை” எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல்

தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு.G.ராமசாமி, திருச்சி அவர்களுக்கு ரூ.12,175/–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/7153/2017(மையம்)**

**தீர்மானம் எண்.43 (பொருள்–1): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்கு உட்பட்ட மாநகராட்சிப்பள்ளிகளில் Smart Class Room Board, மென்பொருள் விநியோகம் செய்யும் பணியினை ரூ.**9.06** லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, **(** ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.**51/2014–2015** வ.எண்.**1** நாள்.**06.03.2015)** M/s. Future Era, திருச்சி ஒப்பந்தகாரருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதில், இறுதிப்பட்டியல் தொகை வழங்கப்பட்டுவிட்டது.

மேற்படி பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணி மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை செலுத்தப்பட்ட நாள் | தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ . எண் |
| 1. | பொன்மலைக் கோட்டம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டங்களுக்கு உட்பட்ட மாநகராட்சிப்பள்ளிகளில் Smart class Room Board சப்ளை செய்யும் பணி. | M/s. Future Era, கோயம்புத்தூர். | பட்டியலில் தொகை பிடித்தம் செய்யப்பட்ட நாள். **26.05.2015** | **36,023/–** | VIII | 77 | 22 |
| | | | EMD Andra Bank DD No.158248 Date. 27.03.15 | **9,060/–** | VIII | 4 | 56 |
| | | | Additional Deposit SBI DDNo.320965 Date.16.04.15 | **9,060/–** | VIII | 5 | 64 |
| | **மொத்தம்** | | | **54,143/–** | | | |

மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் பட்டியலில் கண்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட தொகை **ரூ.54,143/–ஐ** திரும்ப வழங்குவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

காலங்கடந்த வைப்புத் தொகை (Lapsed Deposit Account) கணக்கு தலைப்பில் வைக்கப்பட்டுள்ள தொகை **ரூ.54,143/–**ஐ திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண். இ1/10881/2014(மை)**

**தீர்மானம் எண்.44 (பொருள்–2): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ. அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண் 59க்குட்பட்ட மார்க்கெட் வளாகத்தில் இயங்கி வரும் சமுதாய சமையலறைக் கூடத்தின் கழிவுகள் சவேரியார் கோவில் தெரு வழியாக புதைவடிகாலில் சென்று கொண்டிருந்தது. அப்புதைவடிகால் குழாயில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு சுகாதாரக் கேடு விளைவிப்பதாக அப்பகுதி பொதுமக்கள் மேற்படி சமுதாய சமையலறை கழிவு புதை வடிகால் குழாயினை வேறு வழியாக மாற்றியமைக்குமாறு கோரி போராட்டம் நடத்தியதன் காரணமாக மேற்படி சமுதாய சமையலறைக் கூடத்திலிருந்து வெளியேறும் கழிவுகளை ஆஸ்பத்திரி சாலையில் புதைவடிகால் மெயின் குழாய் அமைத்து அவ்வழியாக செல்லும் புதைவடிகாலில் இணைக்க ரூ. 3.05 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இப்பணியினை **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994ல் பிரிவு 15ன் கீழ்** மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று இது தொடர்பாக இம்மாநகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் M/s G.R & Sons திருச்சி என்ற ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பணியினை முன் அனுமதி பெற்று மேற்கொண்டமையினை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ6/14281/2019(மையம்)**

**தீர்மானம் எண்.45 (பொருள்–3): பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட நிதியுதவியின் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 28.01.2020 அன்று கோரியதில், (ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 436 / 2019-20) வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரை செய்துள்ளதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் / திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19** | | | |
| 1 | வார்டு எண் 43 இலுப்பூர் சாலையில் நியாய விலைக்கட்டிடம் கட்டுதல்<br><br>மதிப்பீடு ரூ.12.00லட்சம் | ஏ.ஜி.ஆர்.கண்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br><br>ஆர்.முத்துலெட்சுமி, திருச்சி | 1.08% கூடுதல்<br><br>0.07% குறைவு | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **திருமதி.ஆர்.முத்து லெட்சுமி, திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்38 கவிபாரதி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்குச் சாலையில் மைய சுடுகலவை இயந்திரம் மூலம் தார்சாலை அமைத்தல்<br>மதிப்பீடு ரூ.25.00லட்சம் | எஸ்.எஸ். சுந்தர் கண்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி<br><br>ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி | 0.07% குறைவு<br><br>2.31% அதிகம் | பெறப்பட்ட இரு ஒப்பந்தப் புள்ளிகளில் **மெசர்ஸ். எஸ்.எஸ்.சுந்தர் கண்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான விலை வீதத்தில் கொடுத்துள்ளதனை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் 5ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**[ இ3/9535/2018]**

**தீர்மானம் எண்.46 (பொருள்–4): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சொத்துவரி, தண்ணீர் கட்டணம், புதைவடிகால் கட்டணம் , காலிமனை வரி மற்றும் தொழில்வரி ஆகிய இனங்களை நிலுவை மற்றும் நடப்பு கேட்புகளை 100% நிலுவையின்றி வசூலிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது அரசாணையின்படி சொத்துவரி குறைக்கப்பட்டுள்ளது. ஆதலால், அனைத்து வரிவிதிப்புகளுக்கும் வரிகுறைப்பு செய்யப்பட்ட விவரத்திற்கான கேட்பு அறிவிப்புகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும், வரி குறைப்பு பற்றிய விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்ய காலஅவகாசம் தேவைப்பட்டதால், அக்கால கட்டத்தில் அனைத்து வரியினங்களையும் வசூலிக்க இயலாத நிலை ஏற்பட்டு வரிவசூலில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில் சொத்துவரி, தண்ணீர்கட்டணம் புதைவடிகால் கட்டணம், காலிமனைவரி மற்றும் தொழில்வரி இனங்களின் மொத்த வரிவிதிப்புகள் எண்ணிக்கை 436842 ஆகும். தற்போது இவற்றில் 270580 எண்ணிக்கையிலான வரிவிதிப்புகளுக்கு கேட்புகள் நிலுவையில் உள்ளது.

மேற்கண்ட 270580 எண்ணிக்கையின்படி வரிவிதிப்புகளுக்கு கேட்பு அறிவிப்புகள் விரைவில் வரிவிதிப்புதாரர்களுக்கு சார்வு செய்து வசூலிக்க வேண்டி உள்ளது. எனவே அவசரம் அவசியம் கருதி 2,70,580 எண்ணிக்கை கேட்பு அறிவிப்புகளை நகல் பெருக்கி மூலம் வழங்கிட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி விபரம் ரூ.** |
|---|---|---|
| 1 | M/s.செந்தில் லேசர் பிரிண்டர்ஸ், நெ,39, கனேஷ் காம்ப்ளக்ஸ், மதுரை ரோடு, திருச்சி –8 | ரூ.0.92பைசா |
| 2 | M/s மாருதி லேசர் பிரிண்டர்ஸ், நெ.417,418, இரணடாம் தளம், ஸ்ரீ சன் பிளாசா,141, மதுரை ரோடு, திருச்சி–8. | ரூ.0.70பைசா |
| 3 | M/s பிரின்ஸ் பிரிண்ட், ஆர்.ஆர்.சபா, காம்ப்ளக்ஸ், முதல் தளம், WB Road, **திருச்சி**-2. | ரூ.0.85பைசா |

மேற்கண்ட நிறுவனங்களில் வரிசை எண் 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி மற்ற நிறுவனங்களைவிட குறைவாக உள்ளது. எனவே குறைவாக உள்ள விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் மாருதி லேசர் பிரிண்டர்ஸ் திருச்சி நிறுவனத்தினை ஏற்கலாம். எனவே கேட்பு

அறிவிப்புக்கு ரூ.70/- பைசா வீதம் 2,70,580 கேட்பு அறிவிப்புகளுக்கு கட்டணமாக ரூ.1,89,406/- ஐ M/s மாருதி லேசர் பிரிண்டர்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு வழங்கலாம்.

மேலும், மேற்படி செலவினத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

ஒப்புதல் அளிக்கலாம்

**அ1/795/2020(மையம்)**

**தீர்மானம் எண்.47 (பொருள்–5): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சொத்துவரி, தண்ணீர்கட்டணம் புதைவடிகால் கட்டணம், காலிமனைவரி மற்றும் தொழில்வரி இனங்களின் மொத்த வரிவிதிப்புகள் எண்ணிக்கை 436842 ஆகும். தற்போது இவற்றில் 270580 எண்ணிக்கையிலான வரிவிதிப்புகளுக்கு கேட்புகள் நிலுவையில் உள்ள வரிவிதிப்புகளுக்கு மெசர்ஸ் மாருதி லேசர் பிரிண்டர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு கேட்பு அறிவிப்புக்கு ரூ.0.70/- பைசா வீதம் 2,70,580 கேட்பு அறிவிப்புகளுக்கு கட்டணமாக ரூ.1,89,406/-ஐ வழங்க மெசர்ஸ் மாருதி லேசர் பிரிண்டர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு வழங்க 14.01.2020ல் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கூடுதலாக 6,000 பக்கங்கள் உள்ளது என மெசர்ஸ் மாருதி லேசர் பிரிண்டர்ஸ் திருச்சி நிறுவனத்தின் மூலம் 14.2.2020ல் பட்டியல் வரப்பெற்றுள்ளது, கேட்பு பக்கங்கள் 6000 கூடுதலாக உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டது சரிபார்க்கப்பட்டது. எனவே கூடுதலாக உள்ள 6000 பக்கங்களுக்கு 6000X0.70=4200/- உள்ள தொகையை மெசர்ஸ் மாருதி லேசர் பிரிண்டர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு வழங்கலாம்.

மேலும், மேற்படி செலவினத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

ஒப்புதல் அளிக்கலாம்

**அ1/795/2020(மையம்)**

**தீர்மானம் எண்.48 (பொருள்–6): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம், வார்டு எண் 27, சங்கலியாண்டபுரம் பழையது மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு செல்லும் 250 mm dia pipe பிரதான குடிநீர் குழாயில் கசிவு ஏற்படுகிறது மற்றும் வார்டு எண் 43 ல் முடுக்குப்பட்டிக்கு செல்லும் 300 mm dia AC pipe பிராதன நீர் உந்து குழாயில் கசிவு ஏற்படுகிறது, இதனால் போதிய அளவு குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது, எனவே உடைப்பு ஏற்பட்ட பகுதியில் MS Pipe மற்றும் உதிரி பாகங்கள் பொருத்தி சரிசெய்யும் பணியை மேற்கொள்வதற்கு தொகை ரூ.6.60இலட்சத்தில் மெசர்ஸ். ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06% குறைவான விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/737/2020(மையம் )**

**தீர்மானம் எண்.49 (பொருள்–7): பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் ரேபீஸ் தடுப்பு ஊசி போடும் பணிகளை Award Trust மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்ட பணியினை மேற்கொண்டமைக்கு தனிக்கையில் எவ்வித தணிக்கை தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | |
| | | | | தொ குப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | 700 தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்து ரேபீஸ் தடுப்பு ஊசி போடும் பணி **மதிப்பீடு ரூ.6.23 லட்சம்** (எச்2/390/16) | EMD DD.No: 342137 Date: 16.02.16 | 12460.00 | VIII | 73 | 101 |
| **மொத்தம்** | | | **12460.00** | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிக்கு செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.**12,460/-/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் Award Trust அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு செலுத்தியுள்ள வைப்புத் தொகை ரூ.**12,460/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**எச்4/10406/2019 (மையம்)**

**தீர்மானம் எண்.50 (பொருள்–8): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை கல்விநிதி 2019–20ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.415/2019–20ன் 27.12.2019அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | **கல்விநிதி – 2019–20** | | |
| 1 | அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.14 டாக்டர் மதுரம் மாநகராட்சி துவக்கப் பள்ளியில் மராமத்து பணிகள் | 1. **திரு. சி. தனபால், 0.07% குறைவு.**<br>2. திரு. பி. வேலுசாமி, | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு. சி. தனபால், ஒப்பந்தக்காரர் வழங்கியுள்ள மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்தல்.<br><br>மதிப்பீடு ரூ.21.40 இலட்சம். | 1.68 % அதிகம். | குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**(கோப்பு எண்.இ1/10341/2019(மை))**

**தீர்மானம் எண்.51 (பொருள்–9): அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – சு. சிவசுப்பிரமணியன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**